DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: Venkatesan | Father's Name: Velu |
| Village: Thumberi | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 46 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 28.06.2022

O.S. 82/2016, DW1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை – வாதி மாணிக்கம் என்னுடைய நிலத்தின் பக்கத்து நிலத்துக்காரர் என்றால் சரிதான். என்னுடைய சொத்தை ஒட்டி தெற்கு பக்கத்தில் வாதியின் நிலம் உள்ளது என்றால் ஆமாம், என்னுடைய வரப்பு ஒட்டி உள்ளது. வாதி சொத்திற்கும் வரப்பு உள்ளதா என்றால் உள்ளது. என்னுடைய சொத்திற்கும், வாதியின் சொத்திற்கும் உரிய வரப்புகளின் அகலம் எவ்வளவு என்றால் என்னுடைய சொத்தின் வரப்பினை வாதி கழித்துவிட்டார், அதனால் என்னால் இரண்டு வரப்புகளின் அகலமும் சொல்ல இயலாது. எப்போது வாதி நான் சொல்லுவதுபோல வரப்பினை கழித்தார் என்றால், நான் இந்த வழக்கிற்காக நீதிமன்றம் வருவதற்கு முன்பே கழித்துவிட்டார். வாதி வழக்கு சொத்தின் வரப்பினை கழித்துவிட்டார் என்று நான் தற்போது சொல்லும் சங்கதியை என்னுடைய பதிலுரையிலோ, இந்த முதல் பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என்னுடைய சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 165/1பி ஆகும். வாதி மாணிக்கத்திற்கு சொந்தமான சொத்தின் சர்வே எண் 165/5 என்றால் சரிதான். சர்வே எண்.165/5 சொத்தினை பொறுத்து வாதிக்கு அவர் கோருவதுபோல தீர்ப்பாவதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் சாட்சி சர்வே எண்.165/1பி எனக்கு சொந்தமானது என்றும், எனக்கு சொந்தமான சொத்து எனக்கே பாத்தியம் என்றும், அவருக்கு சொந்தமான சொத்து வாதிக்கே பாத்தியம் என்றும் சாட்சியம் அளிக்கிறார். சாட்சியிடம் நீதிமன்றம் மீண்டும் அதே கேள்வியை தெளிவாக கேட்டபோது சாட்சி நேரடியாக பதில் அளிக்காமல் சர்வே எண்.165/5 வாதிக்கு பாத்தியம் என்றும், சாட்சி பிரதிவாதிக்கு பாத்தியமான சர்வே எண்.165/1பி–ஐ பொறுத்து வாதிக்கு உரிமை இல்லை என்றும் சாட்சியம் அளிக்கிறார். 1999 ஆம் ஆண்டில் வாதி கிரையம் மூலமாக சொத்தினை கிரையம் பெற்றார் என்றாலும், அவ்வாறு கிரையம் பெற்ற சமயத்தில் எவ்வளவு சொத்தினை அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்தாரோ, அதே அளவுள்ள சொத்தினை தான் தற்போதும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய சொத்தான சர்வே எண்.165/1பி சொத்தானது முக்கோண வடிவில் அமைந்துள்ளது என்றால் இல்லை, என்னுடைய சொத்து நேராக உள்ளது, முக்கோண வடிவில் பொய்யாக கொடுத்துள்ளார்கள். முக்கோண வடிவில் உள்ளதாக யார் பொய்யாக கொடுத்துள்ளார் என்றால், மாணிக்கம் தான் வழக்கில் அவ்வாறு பொய்யாக சொல்லியுள்ளார். என்னுடைய சொத்திற்கான வரைபடத்தை நான் கிராம நிர்வாக அலுவலரிடம் வாங்கி பார்த்தேனா என்றால், வாங்கி

பார்க்கவில்லை, அது தவறாக உள்ளது, என்னுடைய இடம் பட்டாபடி சரியாக உள்ளது. கிராம நிர்வாக அலுவலகத்தில் என்னுடைய சொத்தை முக்கோணமாக வரைபடம் போட்டு இருப்பதாக சொல்வது குறித்து ஆட்சேபனை ஏதாவது செய்தேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்தினை ஒட்டி வடக்கு பக்கம் தார்ரோடு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு ஒட்டி வடக்கு பக்கத்தில் அமைந்துள்ள தார்ரோட்டை ஒட்டி உடன் வடக்கு பக்கத்தில் உள்ள சொத்து எனக்கு சொந்தமானது என்றால் சரிதான். ஊருக்கு தார்ரோடு அமைத்த சமயத்தில் ரோட்டிற்கு எங்கள் நிலம் தான் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம் என்னுடைய தாத்தா தான் கொடுத்தார். எனது தாத்தா ரோட்டிற்கு நிலம் கொடுத்தது போல பல பேர் இடம் கொடுத்ததால் தான் எங்கள் ஊருக்கு தார்ரோடு கிடைத்தது என்றால் சரிதான். தார்ரோட்டிற்கும், வழக்கு சொத்திற்கு இடையில் உள்ள என்னுடைய சொத்து தார்ரோட்டிலிருந்து எவ்வளவு அடி பள்ளத்தில் உள்ளது எனக்கு அந்த விவரம் தெரியாது. வழக்கு சொத்தை ஒட்டி அமைந்துள்ள என்னுடைய சொத்தின் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 8 ஏர்ஸ் ஆகும். வழக்கு சொத்தினை ஒட்டி அமைந்துள்ள என்னுடைய சொத்திற்கு தண்ணீர் வசதி உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய சொத்தாக நான் சொல்லும் 8 ஏர்ஸ் அளவுள்ள சொத்திற்கு நீளம், அகலம் சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், பின்பும் எனக்கும், வாதிக்கும் இடையே பலமுறை பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையம் சென்று வந்தோம் என்றால் சரிதான். வழக்கிற்கு முன்னர் வழக்கு சொத்தினை எத்தனை முறை அளந்து காண்பித்தார்கள் என்றால் வழக்கிற்கு முன்னர் ஒருமுறை மட்டும் அளந்து காண்பித்தார்கள். இந்த வழக்கில் வழங்கப்பட்ட இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவை எதிர்த்து நான் ஏதாவது மேல் முறையீடு சென்றேனா என்றால் செல்லவில்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்த பதிலுரைக்கான விவரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த என்னுடைய பதில் உரையில் செவ்வக வடிவத்தில் இருக்க கூடிய என்னுடைய சொத்தின் வரைபடத்தை முக்கோண வடிவத்தில் வாதி மோசடி செய்து வாதி வரைபடம் தயாரித்துள்ளேன் என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லியுள்ளதுபோல வரைபடத்தில் மோசடி செய்துள்ளதாக தெரிவித்துள்ள சங்கதி குறித்து ஏதேனும் வருவாய்துறை அலுவலகத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 1989 ஆம் ஆண்டில் எங்கள் சொத்தை நாங்கள் அளந்து பார்த்துதான் பாகம் செய்துள்ளோமா என்றால் ஆமாம் எங்கள் தாத்தா அளந்து பார்த்து தான் கொடுத்தார். நான் சொல்வதுபோல 1989 ஆம் ஆண்டில் அளந்து பார்த்தபோது வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் தான் அளந்து பார்த்தோமா என்றால் நான் அப்போது சிறுவனாக இருந்தேன், என்னுடைய தாத்தா தான் அளந்தார். என் தாத்தா எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது தாத்தா உயிருடன் இருந்த வரை அளவு விவரங்கள் தவறாக உள்ளது என ஏதாவது புகார் அளித்துள்ளாரா என்றால் அளிக்கவில்லை. வழக்கு சொத்திலும், அதனை ஒட்டி அமைந்துள்ள என்னுடைய நிலத்திலும் உள்ள தேக்கு மரத்தின் வயது என்ன இருக்கும் என்றால் என்னுடைய நிலத்தில் என் தாத்தா தேக்கு மரம் வைத்தார், வாதி நிலத்தில் உள்ள தேக்கு மரத்தை விற்றுவிட்டார் என்று நினைக்கிறேன். என்னுடைய நிலத்தில் எத்தனை தேக்கு மரங்கள் உள்ளது என்றால் நான் எண்ணி பார்க்கவில்லை, சுமார் 6, 7 இருக்கும். என்னுடைய சொத்தில் இருக்கும் தேக்கு மரங்களின் மதிப்பு

என்ன இருக்கும் என்றால் எனக்கு மதிப்பு தெரியாது. நாங்கள் ஏற்படுத்திகொண்ட பாக பத்திரத்தில் தேக்கு மரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா பாகம் பத்திரம் ஏற்பட்ட பிறகு தான் தேக்கு மரங்கள் வைக்கப்பட்டது. எங்கள் சொத்திற்கான வரைபடத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை, பட்டா பத்திரங்களை போட்டுள்ளேன். புல வரைபடத்தில் என்னுடைய நிலம் முக்கோண வடிவத்தில் இருப்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 புகைப்படங்களில் காலியாக உள்ள நிலம் மற்றும் சோளம் பயிரிடப்பட்டுள்ள நிலம் யாருடையது என்றால் சோளம் பயிரிடப்பட்டுள்ள நிலம் என்னுடையது, காலியாக உள்ள நிலம் வாதியுடையது. என்னுடைய பி.வா.சா.ஆ.3 புகைப்படத்தில் காலியாக உள்ள இடத்தில் தான் அந்த தேக்கு மரங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதியான போலியான ஆவணங்களை வாதி தாக்கல் செய்திருப்பதாக தெரிவித்த நிலையில், என்ன போலியான ஆவணங்களை வாதி தாக்கல் செய்துள்ளார் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் என்னால் சொல்ல முடியாது. நான் சமர்ப்பித்துள்ள வா.சா.ஆ.4 புகார் மனுவினை காவல் நிலையத்தில் அளிக்கவே இல்லை என்றாலும், அதனால் தான் என்னால் புகார் மனு ஏற்பு ரசீது சமர்பிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமான சொத்தை நான் எப்போதாவது அளந்து சரிபார்த்தேனா என்றால் அளக்கவில்லை. தற்போது நீதிமன்றம் மூலமாக வழக்கு சொத்துக்களை அளக்க சம்மதமா என்றால் சம்மதம், ஆனால் பட்டா மற்றும் பத்திரப்படி தான் அளக்க வேண்டும் வரைபடம் மூலம் அளக்க கூடாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் பட்டா மற்றும் பத்திரங்களில் நீளம், அகலம் அளவுகள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. எனக்கு பாத்தியம் என்று சொல்லப்படும் 8 ஏர்ஸ் அளவிற்குரிய சொத்து சரியாக உள்ளது என்றாலும், நான் என்னுடைய வசதிக்காக வேண்டி முக்கோண வடிவத்தில் உள்ள சொத்தை செவ்வக வடிவில் உள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் சரியல்ல. அதனால் வாதியின் வழக்கு அனுமதிக்கதக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.